யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

FWC

தரம் :- 13 (2016)	வணிகக்கல்வி – I	இரண்டு மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்கள்:-

சுட்டெண் :..............................

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் I இற்காக	
வினா இல	புள்ளிகள்
01 - 30	
31 - 50	
மொத்தம்	

01) கைத்தொழில் பொருட்களுக்கும் நுகர்வுப் பொருட்களுக்குமிடையிலான அடிப்படை வேறுபாடு பின்வருவனவற்றுள் எதனை அடிப்படையாகக் கொண்டது?
(1) பொருட்களின் பெறுமதி
(2) பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட நோக்கம்
(3) பங்கீடு, மேம்படுத்தல் செய்யப்பட்ட நோக்கம்
(4) கொள்வனவு செய்யப்பட்ட அளவும், தடவைகளும்
(5) பொருட்களின் வாழ்க்கைக் காலம்
(.......)

agaram.lk

02) இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள எல்லாக் கைத்தொழில்களையும் அடக்கியுள்ள மூன்று பிரிவுகளும் யாவை?
(1) தனியார், கூட்டுறவு, அரசு
(2) சிறிய, நடுத்தர, பெரிய
(3) சுரங்கம், நிர்மாணம், குடிசை
(4) விவசாயம், கைத்தொழில், சேவை
(5) சுரங்கம், உற்பத்தி, கட்டுமானம்
(.......)

03) பின்வரும் அட்டவணையில் X மற்றும் Y நிரல்களானது நுகர்வோரின் தேவை, விருப்பத்தையும் அவற்றின் பண்புகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

X	Y
A. தேவை	1. வரையறுக்கப்பட்டவை
B. விருப்பம்	2. பலவகைப்பட்டவை
	3. பொதுத்தன்மை கொண்டவை
	4. வரையறைக்குட்படாதவை
	5. அத்தியாவசியமானவை
	6. பரவலானவையாகக் காணப்படல்

மேலே தரப்பட்ட அட்டவணையை கருத்திற் கொண்டு தேவை விருப்பத்திற்கும் அவற்றுக்கான பண்புகளுக்கும் மிகவும் பொருந்தக் கூடிய சரியான தொகுதியைத் தெரிவு செய்க.
(1) $A - 1,2,3,/ B - 4,5,6$
(2) $A - 1,3,5 / B - 2,4,6$
(3) $A - 4,5,6 / B - 1,2,3$
(4) $A - 1,3,6 / B - 2,4,5$
(5) $A - 2,3,5 / B - 1,4,6$
(.......)

Scanned with CamScanner

04) பின்வருவன வணிகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய சூழல் சக்திகளாகும்.

A - வாடிக்கையாளர்கள்

B - அமைப்பு கலாச்சாரம்

C - போட்டியாளர்கள்

D - வழங்குநர்கள்

E - பதிலீட்டுப் பொருள் உற்பத்தியாளர்கள்

F - அமைப்புமுறை

மேலுள்ளவற்றுள் வணிக வேலைச் சூழல் சக்திகளை மட்டும் உள்ளடங்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, B, C, D (2) A, C, D, E

(3) A, C, D, F (4) B, C, D, E

(5) B, C, D, F (.......)

05) பின்வரும் அம்சங்களுள் எது ஒரு உணவுப் பொருள் சட்டுத் துண்டின் ஒரு சட்டத் தேவை அன்று

(1) உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்கள்

(2) உற்பத்தியாளனின் பெயர்

(3) உற்பத்தி செய்யப்பட்ட திகதி

(4) அலகு விலை

(5) காலாவதியாகும் திகதி (.......)

06) பின்வரும் அட்டவணையில் X நிரலில் உற்பத்தித்துறையும் Y நிரலில் அவற்றினது துணைப் பிரிவுகளும் குறிக்கப்பட்டுள்ளன.

X	Y
A. விவசாயம்	1. வங்கி, காப்புறுதி
B. கைத்தொழில்	2. கட்டட நிர்மாணம்
C. சேவை	3. கடற்றொழில்
	4. உற்பத்திக் கைத்தொழில்
	5. போக்குவரத்துத் தொடர்பாடல்
	6. சுரங்கமறுத்தல்

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) $A - 4, 6$ $B - 1, 5$ $C - 2, 3$

(2) $A - 2, 4$ $B - 3, 6$ $C - 1, 5$

(3) $A - 2, 3$ $B - 4, 6$ $C - 1, 5$

(4) $A - 3, 6$ $B - 2, 4$ $C - 1, 5$

(5) $A - 4, 6$ $B - 3, 5$ $C - 1, 2$ (.......)

07) பின்வருவனவற்றுள் எது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமொன்று அல்ல?

(1) புலமைச் சொத்து அதிகாரச் சட்டம்

(2) தேசிய சூழற் பாதுகாப்புச் சட்டம்

(3) தொலைத் தொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் சட்டம்

(4) மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

(5) அழகு சாதனங்கள் மருந்துப் பொருட்கள் கட்டளைச் சட்டம் (.......)

agaram.lk

Scanned with CamScanner

08) நுகர்வோர் உரிமைகள் சில கீழே தரப்படுகின்றன.

A - நுகர்வோர் கல்விக்கான உரிமை

B - பாதுகாப்பை பெறும் உரிமை

C - தெரிவு செய்வதற்கான உரிமை

D - இழப்பீடு பெறும் உரிமை

E - தகவல் தெரிந்து கொள்ளும் உரிமை

F - கவனத்தை ஈரப்பதற்கான உரிமை

மேலே தரப்பட்ட உரிமைகளுள் ஜொன். எப். கெனடி என்பவரால் பிரகடனப்படுத்தப்பட்ட உரிமைகளின் சரியான தொகுதி

(1) A, B, C, D (2) A, B, D, F (3) A, B, E, F

(4) B, C, D, E (5) B, C, D, F (.......)

09) பங்குடமை வணிகத்தில் பங்காளரொருவரது ஒரு கடமை

(1) வணிக நடவடிக்கையில் பங்குபற்றுதல்

(2) வணிகத்தின் கணக்குகளை அறிந்து கொள்தல்

(3) நட்டங்களைப் பகிர்ந்து கொள்தல்

(4) மூலதனத்திற்கு வட்டி பெறுதல்

(5) இலாபங்களைப் பகிர்ந்து கொள்தல் (.......)

10) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி தொடர்பாக பொருத்தமற்ற கூற்று எது?

(1) ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை 01 ஆகவும், ஆகக்கூடிய பங்குதாரர் எண்ணிக்கை 50 ஆகவும் இருத்தல்.

(2) ஆகக் குறைந்த இயக்குனர் எண்ணிக்கை 01 ஆகும். உச்ச எண்ணிக்கை வரையறை இல்லை.

(3) கம்பனிகளின் பங்குகளை பகிரங்கமாக வெளியீடு செய்தல் தடுக்கப்பட்டுளளது.

(4) பங்குதாரர்களுக்கு இலாபம் வழங்கப்பட முன் கடன் மீளச் செலுத்தும் ஆற்றல் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட வேண்டியிருத்தல்

(5) பங்குகள் கைமாற்றப்பட முடியாதவை. (.......)

agaram.lk

11) அங்கீகாரமளிப்பவரினால் அங்கீகாரம் பெறுபவருக்கு வழமையாக வழங்கப்படுவது

(1) முகாமைப் பயிற்சி, தொழிலாளர், சந்தை என்பன ஆகும்.

(2) தொழில் நுட்பம், முகாமைப்பயிற்சி, நிதிவசதி என்பன ஆகும்.

(3) தொழிலாளர் பயிற்சி, சந்தை, முகாமைப் பயிற்சி என்பன ஆகும்.

(4) முகாமைப் பயிற்சி, தொழிலாளர் பயிற்சி, மூலதனம் என்பன ஆகும்.

(5) முகாமைப் பயிற்சி, தொழிலாளர், மூலதனம் என்பன ஆகும். (.......)

12) இலங்கையில் முதலாவதாக உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம் எது?

(1) பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

(2) பனை தென்னை கூட்டுறவுச் சங்கம்

(3) விவசாயப் பொருள் உற்பத்தியும் பங்கீட்டுக்குமான கூட்டுறவுச் சங்கம்

(4) நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம்

(5) கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் (.......)

13) பின்வருவனவற்றுள் முயற்சியாண்மை தேர்ச்சிகளாக கருதப்படாதது எது?

(1) எதிர்ச் செயலாற்றும் இயல்பு

(2) முறையான திட்டமிடல்

(3) பிரச்சினைகளைத் தீர்த்தல்

(4) தூண்டும் திறன்

(5) கண்காணித்தல் (.......)

Scanned with CamScanner

14) பின்வருவனவற்றுள் காசோலை ஒன்று தொடர்பான பிழையான கூற்று எது?
(1) காவிக் காசோலை ஒன்றைப் புறக்குறிப்பு (*endorsement*) எதுவுமில்லாமல் எவருக்கும் கைமாற்ற முடியும்.
(2) திறந்த காசோலை ஒன்றை வங்கிக்கு எடுத்துச் செல்லும் நபர் ஒருவர் கருமபீடத்திலேயே அதனைக் காசாக்க முடியும்.
(3) காசோலை ஒன்றின் புறக்குறிப்பு என்பது வரையுநர் காசோலை ஒன்றின் மறுபுறத்தில் ஒப்பமிடுதல் வேண்டும்.
(4) முகப்பக்கத்தில் எதுவித குறுக்குக்கோடிடல் இல்லாத காசோலை ஒன்று திறந்த காசோலை எனப்படும்.
(5) கைமாற்றத்தகாதது எனக் குறுக்குக் கோடிட்ட காசோலையை கைமாற்றம் செய்ய முடியும். (.......)

15) A - கூட்டுறவு கிராமிய வங்கிகள்
B - குத்தகைக் கம்பனிகள்
C - காப்புறுதிக் கம்பனிகள்
D - முதன்நிலை வணிகர்கள்
E - நிதிக் கம்பனிகள்
F - கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள்
மேலே குறிப்பிட்டவற்றுள் இலங்கையில் உள்ள விசேட நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.
(1) A, B, C (2) B, C, D (3) D, E, F
(4) C, D, F (5) B, D, F (.......)

16) காப்புறுதி செய்பவர் வெளிக்கட்சியினரிடமிருந்து இழப்பீட்டைப் பெறும் தனது உரிமையை காப்புறுத்துவோருக்கு மாற்ற வேண்டும் எனும் காப்புறுதித் தத்துவம் எது?
(1) காப்புறுதி செய்யும் உரிமை
(2) அதியுயர் நம்பிக்கை
(3) பங்களிப்புத் தத்துவம்
(4) பதிலாள் வைப்புத் தத்துவம்
(5) அண்மைக் காரணித் தத்துவம் (.......)

agaram.lk

17) தொடர்பாடல் செயன்முறையின் மூலம் கூறுகள், சிறப்பியல்புகள் என்பனவற்றுட் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - தெளிவு B - செய்தி C - சுருக்கம்
D - ஊடகம் E - விரைவு F - துலங்கள்
பின்வரும் வகுதிகளுள் எது தொடர்பாடல் முறையின் சிறப்பியல்புகளைக் குறித்து நிற்கின்றது?
(1) A, C, E (2) A, D, F (3) B, C, F
(4) C, E, F (5) B, C, E (.......)

18) ஒரு இறக்குமதியாளனின் பொருட்களினது உரிமையை நிரூபிக்கும் பிரதான ஆவணம்
(1) மாற்றுண்டியலாகும்.
(2) நாணயக் கடிதம் ஆகும்.
(3) வார்நாமமாகும்.
(4) இறக்குமதிச் சான்றிதழ் ஆகும்.
(5) இறக்குமதி நுழைவு ஆகும். (.......)

19) ஒரு சில்லறை வியாபாரியால் மிக முக்கியமான காரணியாகக் கருதப்படாதது
(1) நுகர்வோர் வருமானம் ஆகும்.
(2) நுகர்வோர் கல்வி ஆகும்.
(3) நுகர்வோர் கேள்வியாகும்.
(4) நுகர்வோர் தேவைகளும் விருப்பங்களும்
(5) நுகர்வோரின் எண்ணிக்கையாகும். (.......)

Scanned with CamScanner

20) இலத்திரனியல் வியாபாரம் ($e-trade$) தொடர்பான பின்வரும் அனுகூலங்களுள் சமூக ரீதியாக பெறப்படும் அனுகூலம் எது?

(1) சந்தைப் பங்கு விரிவாகுதல்
(2) கொடுக்கல் வாங்கல் விரைவுபடுத்தல்
(3) பொருட்களை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தல்
(4) நவீன பொருட்களைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தல்
(5) ஒப்பீட்டளவில் பொருட்களுக்கான குறைந்த விலை மட்டம் (.......)

21) பின்வரும் அட்டவணையில் X நிரலில் முகாமையாளரது வகிபாகமும் Y நிரலில் அவற்றுக்கான உதாரணங்களும் குறிக்கப்பட்டுள்ளன.

X	Y
A. மேலதிகாரி	1. கூட்டங்களை நடத்துதல்
B. தலைவர்	2. பிரமுகவர்களை வரவேற்றல்
C. தகவலளிப்பவர்	3. ஊழியர்களை ஊக்குவித்தல்
D. முயற்சியாண்மையாளர்	4. நிறுவன ஒழுங்கமைப்பு முறையை மாற்றுதல்
	5. புதிய தொழிற்சாலையொன்றை ஆரம்பித்தல்
	6. தொலைபேசி அழைப்பு மேற்கொள்ளல்
	7. புதிய உபாயங்களை தீர்மானித்தல்
	8. உழியர்களை பதவி நீக்கம் செய்தல்

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

(1) $A-1,2$ $B-3,8$ $C-5,6$ $D-4,7$
(2) $A-2,5$ $B-3,8$ $C-1,6$ $D-4,7$
(3) $A-1,8$ $B-2,3$ $C-6,7$ $D-4,5$
(4) $A-1,2$ $B-3,8$ $C-4,7$ $D-4,5$
(5) $A-3,5$ $B-1,8$ $C-4,6$ $D-3,7$ (.......)

agaram.lk

22) நிறுவனமொன்றின் வினைத்திறனையும் பயனுறுதித் தன்மையினையும் அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நியதிகள் சில கீழே தரப்படுகின்றன.

A - செலவிடப்பட்ட நேரம்
B - இலக்கினை அடைதல்
C - ஊழியர் புரள்வு
D - நிலைத்திருக்கக்கூடிய கால அளவு
E - ஒரு ஊழியருக்கான வருவாய்
F - உற்பத்தி விளை திறன்

மேலே தரப்பட்டவற்றுள் வினைத்திறனை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் நியதிகளை உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(1) A, B, D, E (2) A, C, E, F (3) B, C, E, F
(4) C, D, E, F (5) B, D, E, F (.......)

23) தரக்கட்டுப்பாடு தொடர்பாக பின்வருவனவற்றுள் எது உண்மையற்றது?

(1) உற்பத்தியின் ஆரம்ப நிலையில் குறைபாடுகளைத் தடுத்தல்
(2) பொருட்களானது முன் நிர்ணய நியமங்களுக்கு ஏற்ப உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தல்
(3) பூச்சிய ($Zero$) குறைபாடு மட்டத்தை அடையும் வரைக்கும் உற்பத்தியை மேற்கொள்ளல்
(4) முடிவடைந்த பொருட்களை மாத்திரம் பரிசோதித்தல்
(5) வளங்கள் வீணாகுவதை குறைப்பதற்கு படிமுறைகளை எடுத்தல் (.......)

Scanned with CamScanner

24) உற்பத்தி நிறுவனமொன்றின் இருப்புத் தொடர்பான சில கிரயங்கள் கீழே தரப்படுகின்றன.

A - பொருள் பரிசீலனைக் கிரயம்

B - காப்புறுதிக் கட்டணம்

C - பழமை வெளியேற்றல் கிரயம்

D - பொருள் இடமாற்றும் கிரயம்

E - கட்டளை தயாரித்தல் கிரயம்

F - போக்குவரத்துக் கிரயம்

G - அறிக்கைப்படுத்தும் கிரயம்

H - இருப்புக்கள் சேதமடைதல்

இவற்றுள் இருப்பு பேணல் கிரயத்தை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

(1) B, C, D, G, H

(2) A, C, D, E, G

(3) A, B, C, D, E

(4) B, C, D, E, F

(5) D, E, F, G , H (.......)

25) பின்வருவன சந்தைப்படுத்தற் கலவையில் உள்ளடங்கும் சில கருவிகள் (*tools*) ஆகும்.

A - பண்டக்குறி

B - கழிவு

C - விளம்பரப்படுத்தல்

D - விநியோக வழிமுறைகள்

E - போக்குவரத்து

F - பொதிகட்டல்

G - கொடுப்பனவு

H - தரம்

I - நேர்ச் சந்தைப்படுத்தல்

J - உத்தரவாதங்கள்

K - பொதுசனத் தொடர்புகள்

L - நிகழ்வுகளும் அனுபவங்களும்

மேற்குறித்தவற்றுள் ஒரு உற்பத்திப் பொருட் கருவிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செயக.

(1) A, C, F, I

(2) B, C, E, I

(3) C, I, K, L

(4) D, H, I, J

(5) A, F, H, J (.......)

26) போட்டியாளர்களது விலைகளை அடிப்படையாகக் கொண்டு தனது பொருட்களுக்கு விலையை நிர்ணயித்தல் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) இலக்கத் திரும்பல் விலையிடல்

(2) உணரத்தக்கப் பெறுமதியில் விலையிடல்

(3) நடைமுறை விலையிடல்

(4) சமூக விலையிடல்

(5) பெறுமதி விலையிடல் (.......)

agaram.lk
Scanned with CamScanner

27) கீழே நிதிமூலங்கள் சில தரப்பட்டுள்ளன.

A - மேலதிகப் பற்று

B - நிறுத்திவைத்த இலாபம்

C - குத்தகை எடுத்தல்

D - பங்கு வழங்கல்

E - வணிகப் பத்திரம்

F - தொகுதிக்கடன்

மேலே தரப்பட்டவற்றுள் எவை நேர் நிதிமூலங்களாகும்?

(1) A, B, D (2) B, D, F (3) B, D, E

(4) A, D, F (5) A, B, E

(.......)

28) பின்வருவனவற்றுள் மூலதனச் சந்தை அமைப்புமுறை எது?

(1) வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தை

(2) உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை

(3) திறைசேரி உண்டியல் சந்தை

(4) திறைசேரி முறிகள் சந்தை

(5) வணிகப் பத்திரங்கள் சந்தை (.......)

29) நிறுவனதொழில் அலகொன்று எனும் வகையில் மேற்கொள்ள வேண்டிய கருமங்கள், கடமைகள் பொறுப்புக்கள் என்பவற்றைத் தயாரித்தல்

(1) தொழில் விபரணம்

(2) தொழில் உருவாக்கம்

(3) தொழில் மதிப்பீடு

(4) தொழில் குறித்துரைத்தல்

(5) தொழில் பகுப்பாய்வு (.......)

30) பின்வருவனவற்றுள் எது மனிதவள முகாமையின் ஒரு தொழிற்பாடு அன்று?

(1) மனித வளத்திட்டமிடல்

(2) ஆர்சேர்ப்பும் தெரிவும்

(3) உறுதியான ஊழியர் தொடர்புகளைப் பேணுதல்

(4) திருப்திகரமான ஊழியர் படைகளைப் பேணுதல்

(5) இணைத்துக் கொள்ளுதலும், திசைமுகப்படுத்தலும் (.......)

❖ **31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

31) (அ) பல்வேறுபட்ட அக்கறையுடைய தரப்பினருள், வணிகங்கள் தமது பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தையினைப் பாதுகாத்துக் கொள்வதற்காக .... மீது அக்கறை செலுத்துகின்ற அதேவேளை தொடர்ச்சியாக தேவைப்படுகின்ற நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக .... இன் மீது அக்கறை கொள்கின்றன.

(ஆ) .... ஐயும் .... ஐயும் பேரண்டச் சூழலைப் பற்றி அறிந்து கொள்வதனால் அடையாளப்படுத்த முடியும்.

32) (அ) தனது ஊழியர்களின் நலனில் வணிகங்களின் அக்கறையானது .... என அழைக்கப்படுவதுடன், வணிகங்கள் தம்முடன் சேவையாற்றுகின்ற சகல தரப்பினருக்கும் நல்லது இடம்பெறக் கூடியமுறையில் நல்லது தீயது தொடர்பான அவதானத்துடன் செயற்படல் .... என அழைக்கப்படும்.

agaram.lk
Scanned with CamScanner

(ஆ) மனிதனால் கட்டாயமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டிய உடல், உள ரீதியான நிலைமை .... என அழைக்கப்படுவதுடன் தேவையினை நிறைவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகள் .... என அழைக்கப்படும்.

33) (அ) பாடசாலையின் மாணவர்களின் அடைவு மட்டத்தினைப் பெற்றோர்களுக்கு அறிவிப்பதற்கு .... தொடர்பாடல்முறை பயன்படுத்தப்படுவதுடன், அது ஒரு .... தொடர்பாடல் முறையாகக் கருதப்படும்.

(ஆ) அதியுயர் பெறுமானங் கொண்ட சொத்தொன்றுக்கான நட்டத்தினைக் காப்புறுதிக்கம் பனிகள் பல ஏற்றுக் கொள்ளுதல் .... என அழைக்கப்படுவதுடன், காப்புறுதியின் போது பண ரீதியாக அளவிடக் கூடிய நட்டமொன்று ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தை .... எனக் குறிப்பிட முடியும்.

34) (அ) இலங்கையில் காணப்படும் உற்பத்திப் பொருள் அங்கீகார வணிகங்களுக்கான இரண்டு உதாரணங்கள் .... உம் .... உம் ஆகும்.

(ஆ) இலங்கையில் வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள் இரண்டாக ...., ... ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

35) (அ) வரையறுத்த கம்பனிகள் குறுங்கால நிதியினை திரட்டிக் கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற நிதிக்கருவி .... ஆகும்.

(ஆ) வெளிநாட்டு வியாபாரத்தில் பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் இரு முறைகளாக ...., ... என்பவற்றைக் குறிப்பிடலாம்.

36) (அ) ஏதேனுமொரு விசேட துறைக்கான யாதேனும் கருமமொன்றைச் செய்வதற்கு முகாமையாளரொருவரிடம் இருக்க வேண்டிய விசேடமான இயலுமை .... என அழைக்கப்படும்.

(ஆ) ஒரு ஊழியர் ஒரு மேற்பார்வையாளருக்கு மட்டும் பொறுப்புக் கூறுதல் தத்துவம் .... என அழைக்கப்படும்.

37) (அ) தன்கீழ் பணியாற்றுபவர்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்று கருமமாற்றும் தலைவர் .... என அழைக்கப்படுவதுடன், ஊழியர்களின் சுதந்திர செயற்பாட்டிற்கு இடம் அளிக்கும் தலைவர் .... என அழைக்கப்படுவார்.

(ஆ) நிறுவனமொன்றில் நிதித்திட்டமிடல் கட்டுப்படுத்தலின் போது பயன்படுத்தப்படும் முறைகள் .... உம் .... உம் ஆகும்.

38) (அ) செயல்முறை இட அமைவுத்திட்டமிடலின் இரு வகைகளாக ...., ... என்பவற்றைக் குறிப்பிடலாம்.

agaram.lk
Scanned with CamScanner

(ஆ) வெளியீட்டின் தரத்தினை உறுதிப்படுத்த தரக்கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தக்கூடிய இரண்டு நுட்பமுறைகள் .... உம் .... உம் ஆகும்.

39) (அ) இலங்கையிலுள்ள வணிகங்கள் தமது வியாபாரச் சின்னத்தைப் பதிவு செய்து சட்டரீதியான நிலைமையொன்றினைப் பெற்றுக் கொண்டதும் அது .... என அழைக்கப்படும்.

(ஆ) பங்குச் சந்தையில் பட்டியற்படுத்துவது தொடர்பான நிபந்தனைகளை பின்பற்றாத கம்பனிகளை உள்ளடக்குவது .... என அழைக்கப்படும்.

40) (அ) ஏதாவது பதவிக்குரிய தொழில்பாடுகள் .... இல் காட்டப்படுவதுடன் அப்பதவியில் அமர்த்தப்பட வேண்டியவருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் .... இல் காட்டப்படும்.

(ஆ) நிறுவனம் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கத் தூண்டும் செயற்பாடு .... என அழைக்கப்படுவதுடன், அவர்களில் இருந்து மிகப்பொருத்தமான விண்ணப்பத்தாரிகளை இனம்காணும் கருமம் .... எனவும் அழைக்கப்படும்.

❖ 41 தொடக்கம் 50 வரையிலுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.

41) வணிக நோக்கங்கள் நான்கைப் பெயரிடுக.

1. ....
2. ....
3. ....
4. ....

42) (அ) அண்மைக் காலங்களில் நுகர்வோர் பாதுகாப்பின் தேவை அதிகரித்தமைக்கான காரணிகள் இரண்டு தருக.

1. .... 2. ....

(ஆ) இலங்கையில் நுகரிவோர் நலனைப் பாதுகாப்பதுடன் சம்பந்தப்பட்ட இரு நிறுவனங்களின் பெயர்களை எழுதுக.

1. ....
2. ....

43) சிற்றளவு வணிகத்தின் தோல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

1. ....
2. ....
3. ....
4. ....

44) (அ) இலங்கையில் பயன்படுத்தப்படும் பண வகைகள் இரண்டு தருக.

1. .... 2. ....

(ஆ) வியாபார வங்கிகளினால் வணிகர்களுக்கு வழங்கப்படும் இரண்டு வகையான சேவைகளைத் தருக.

1. ....
2. ....

agaram.lk
Scanned with CamScanner

45) காசோலைகளில் காந்தமைப் புலப் பகுதியில் காணப்படும் நான்கு விபரங்களையும் ஒழுங்குமுறையில் எழுதுக.

1. .... 2. ....

3. .... 4. ....

46) இலத்திரனியல் வர்த்தக செயற்பாட்டு விதிமுறைகள் நான்கினை எழுதுக.

1. ....

2. ....

3. ....

4. ....

47) நிறுவனமொன்றின் கருமங்களை திணைக்களப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் நான்கு முறைகளைக் குறிப்பிடுக.

1. ....

2. ....

3. ....

4. ....

48) உற்பத்திச் செயற்பாட்டிற்கான பொருட் கொள்வனவினைத் தீர்மானிக்கும் நான்கு பிரதான காரணிகளை எழுதுக.

1. ....

2. ....

3. ....

4. ....

49) பங்குப்பரிவர்த்தனை நிலையத்தில் பரிமாற்றப்படும் பிணைப் பத்திரங்களில் முதலிடும் ஒருவருக்குக் கிடைக்கப் பெறுகின்ற நான்கு அனுகூலங்களைத் தருக.

1. .... 2. ....

3. .... 4. ....

50) வேலை விளம்பரமொன்றில் உள்ளடங்கும் பிரதான தகவல்கள் நான்கினை எழுதுக.

1. .... 2. ....

3. .... 4. ....

agaram.lk

Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

FWC

தரம் :- 13 (2016)	வணிகக்கல்வி – II	மூன்று மணித்தியாலங்கள்

அறிவுறுத்தல்:-

➤ ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

பகுதி - I

01) (i) "வணிகத்தின் வளர்ச்சி என்பது ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட ஒரு நிகழ்வல்ல. இது மனித நாகரீகத்துடன் சமாந்தரமாக அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு நீண்டகால செயன்முறையாகும்."

(அ) வணிகத்தின் தற்போதைய நிலை வரையில் விருத்தியடைந்தமைக்கான பல்வேறு கட்டங்களையும் ஒழுங்கு முறைப்படி தருக.

(ஆ) "வணிகம் என்பது உயிர்ப்புடையதும் சமூகம் சார்ந்ததுமான ஒரு விடயமாகும்" இக்கருத்தை விளக்குக.

(04 புள்ளிகள்)

(ii) (அ) வணிக நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட அடிப்படைத் தொழிற்பாடுகளைக் குறிப்பிட்டு விபரிக்குக.

(ஆ) வணிகத்தின் வளர்ச்சிப் போக்குகள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) (அ) இலங்கையின் வேளாண்மை ஏற்றுமதியமைப்பின் கீழ் அதியுயர் ஏற்றுமதி வருமானங்களைப் பெற்றுத்தரும் ஏற்றுமதிகளை அவற்றின் ஒழுங்கிற் குறிப்பிடுக.

(ஆ) முதல் நிலை உற்பத்திக்கும், இரண்டாம் நிலை உற்பத்திக்கும் இடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) வணிகர் ஒருவர் வணிகச் சூழலை கற்கவேண்டியதன் முக்கியத்துவத்தை விபரிக்குக.

(ஆ) வணிகமொன்றின் பேரண்டச் சூழல் காரணிகளுள் பூகோளச் சூழலில் காணப்படும் பல்வேறு காரணிகளிலான மாற்றங்கள் உள்நாட்டு வணிகங்களின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் நான்கு காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) தனித்தனியாக நுகர்வுப் பொருட்கள், கைத்தொழிற் பொருட்கள் என்பவற்றை வகைப்படுத்துக.

(ஆ) வணிகத்தின் மீது அக்கறை காட்டும் தரப்பினர்களைக் (*Stakeholdes*) குறிப்பிட்டு அத்தரப்பினர்கள் அக்கறை கொள்வதற்கான காரணங்களைத் தனித்தனியே கூறுக.

(04 புள்ளிகள்)
(20 புள்ளிகள்)

02) (i) "அரசாங்கம் வணிகங்களின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய வழிமுறைகளில் ஒன்று கொள்கை வகுப்பாளராக செயற்படல் ஆகும்."

(அ) அரசின் இறைக் கொள்கை வணிகங்களின் மீது எவ்வாறான தாக்கத்தை செலுத்தும் என்பதனை விளக்குக.

(ஆ) நேர்வரிக்கும், நேரில் வரிக்கும் இடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) 2003 ம் ஆண்டு 09ம் இலக்க பாவனையாளர் விவகார அதிகாரசபை சட்டத்தின் கீழ் நுகர்வோரின் நடவடிக்கை தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நுகர்வோரிற்கும், வணிக சமூகத்திற்கும் கிடைக்கும் சேவைகளைத் தனித்தனியே விளக்குக. (04 புள்ளிகள்)

agaram.lk
Scanned with CamScanner

(iii) (அ) நுகர்வோரைப் பாதுகாப்பதற்கென இலங்கை தரக்கட்டளைகள் நிறுவகம் மேற்கொள்கின்ற கருமங்கள் நான்கைக் குறிப்பிடுக.

(ஆ) உற்பத்திப் பொருளொன்றின் தரம் என்பதன் கருத்தை நுகர்வோர் கருத்தினடிப்படையில் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) பல்வேறு ஆற்றல் உடையவர்கள் ஒன்று சேர்ந்து செயற்பட பங்குடைமை வணிகம் மிகப் பயனுள்ளதாக உள்ளது.

(அ) பங்குடைமை வணிகத்தின் சிறப்பான பண்புகள் நான்கைக் குறிப்பிடுக.

(ஆ) பங்குடைமை ஒப்பந்தமொன்றில் பொதுவாக உள்ளடக்கப்படுகின்ற விடயங்களைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) கரை கடந்த கம்பனி எனப்படுவது யாது?

(ஆ) கரை கடந்த கம்பனியொன்றின் செயற்பாடுகள் தொடர்பாக அக்கம்பனி மீது கம்பனிகள் அதிகாரச் சட்டம் விதிக்கும் பிரதான கட்டுப்பாடு யாது? (04 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

03) (i) (அ) முயற்சியாளர் ஒருவர் உருவாகுவதற்கு ஏதுவாகக் கூடிய நான்கு காரணிகளை விபரிக்குக.

(ஆ) சிறிய வணிகம் ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியாவசியமானதொரு காரணியாகும். இக்கருத்தை நான்கு உதாரணங்களைக் கொண்டு விளக்குக.

(04 புள்ளிகள்)

(ii) முயற்சியாண்மைக்குரிய தேர்ச்சிகளை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய வழிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) பணத்தின் பண்புகள் நான்கைக் குறிப்பிடுக.

(ஆ) மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள் "பொருளாதார விலை முறைமை உறுதிப்பாடு, நிதி முறைமை உறுதிப்பாட்டை பேணுவதுமாகும்" மேற்போந்த குறிக்கோளை எய்துவதில் இலங்கை மத்திய வங்கி நிறைவேற்றி வரும் நான்கு தொழிற்பாடுகளை எழுதுக.

(04 புள்ளிகள்)

(iv) (அ) குறுக்குக் கோடிட்ட காசோலை மூலம் கொடுப்பனவு செய்தல் ஒரு பாதுகாப்பான முறையாக அமையும் எனப் பொதுவாக கூறப்படுகின்றது. இதற்கு இரு காரணங்களை விபரிக்குக.

(ஆ) வணிக வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கொன்றைத் திறப்பதற்கும், சேமிப்புக் கணக்கொன்றைத் திறப்பதற்கும் ஆன செய்முறைகளிலுள்ள வேறுபாடுகள் யாவை?

(04 புள்ளிகள்)

(v) (அ) அலகும் பொறுப்பாட்சி நிறுவனங்களின் அலகுகளில் முதலீடு செய்வதன் மூலம் சிறு முதலீட்டாளரொருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளை விளக்குக.

(ஆ) ஆயுள் காப்புறுதி உறுதிப்பத்திரம் பெற்றுக் கொண்ட ஒருவருக்கு அவரது வாழ்நாளில் பெறக்கூடிய நன்மைகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

04) (i) நிறுவனங்களில் கூட்டங்களை நடத்தும் போது அவை சரியாக திட்டமிடப்படுதல் வேண்டும். அதன் மூலம் நிறுவனம் கூட்டத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்ள முடியும்.

(அ) கூட்டங்கள் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடலாக கருதப்படுவதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

(ஆ) கூட்டங்கள் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடல் முறையாக கருதப்பட்டாலும் சில கூட்டங்கள் எதிர்பார்த்த நோக்கத்தினை அடைய முடியாமலுள்ளமைக்கான காரணங்கள் எவை என விபரிக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) வணிகச் செயற்பாடுகள் தொடர்பில் போக்குவரத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்குக.

(ஆ) சில்லறை வியாபார நிலையங்களின் நவீன போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

agaram.lk

Scanned with CamScanner

(iii) முகவர்களுள் எவரேனும் நான்கு முகவர்களைக் குறிப்பிட்டு, அம்முகவர்களின் சிறப்பான தொழிற்பாட்டினையும் குறித்துக் காட்டுக. (04 புள்ளிகள்)

(iv) (அ) உற்பத்தி நிறுவனமொன்று தனது உற்பத்திப் பொருட்களை விநியோகிப்பதற்கு இடைநடுவர்களைப் பயன்படுத்துவதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய நான்கு அனுகூலங்களை எழுதுக.

(ஆ) கப்பல் தளப்பத்திரம், ஏற்றுமதிக் குறிப்பு என்றால் என்ன என்பதை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) சுதந்திர வர்த்தகத்தை தடுப்பதற்கு நாடுகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நான்கு கட்டுப்பாடுகளைக் குறிப்பிடுக.

(ஆ) "உலக சந்தையில் இலத்திரனியல் வியாபாரத்தின் ($e - Trade$) பயன்பாடு அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகின்றது" அவ்வாறு இலத்திரனியல் வியாபாரம் வேகமாக வளர்ந்து செல்வதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

பகுதி - II

05) (i) (அ) முகாமை என்பதன் பொருளை தெளிவுபடுத்துவதற்குப் பொருத்தமானதொரு வரைவிலக் கணத்தைத் தருக.

(ஆ) முகாமைச் செயன்முறையின் மூலக்கூறுகளுக்கிடையிலான இடைத்தொடர்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) திட்டமிடல் செயற்பாட்டின் பிரதான கருமங்கள் நான்கும் எவை?

(ஆ) திட்டமிடலின் போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கு எழுதுக. (04 புள்ளிகள்)

(iii) ஒழுங்கமைத்தலின் படிமுறைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) மையப்படுத்தல், பண்முகப்படுத்தல் எனும் பதங்களினால் அறியப்படுவது என்ன?

(ஆ) நெறிப்படுத்தல் செயல் முறைகளுக்குரிய கருமங்களை உதாரணங்களுடன் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(v) (அ) வினைத்திறன் மிகு தலைவர் ஒருவரின் நான்கு சிறப்பியல்புகளைக் குறிப்பிடுக.

(ஆ) நிறுவனமொன்றின் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் செயல்முறையின் முக்கியத்துவத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

agaram.lk

06) (i) வளங்களைப் பயன்படுத்தி உயர்தரத்துடனான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல் செயற்பாட்டு முகாமையின் அடிப்படைக் கருமமாகும்.

(அ) உற்பத்திக் கட்டுப்பாட்டுக் கருமங்கள் நான்கைக் குறிப்பிடுக.

(ஆ) ஆய்வு அபிவிருத்திக் கருமங்கள் உற்பத்தித் தொழிற்பாட்டிற்கு ஏன் முக்கியமானதென விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) உற்பத்தியாளரொருவர் தனது உற்பத்தியைத் தொகுதி ($Batch$) முறையிலிருந்து பாய்ச்சல் ($Flow$) முறைக்கு மாற்ற விரும்புகிறார். இம்மாற்றத்தின் மூலம் அவர் பெற்றுக் கொள்ளக்கூடிய நான்கு நன்மைகளை எழுதுக.

(ஆ) நிறுவனம் ஒன்றின் இலாப தன்மையில் தரக்கட்டுப்பாடு எவ்வாறு தாக்கம் செலுத்தும் என்பதை விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) இருப்புக் கட்டுப்பாடு என்பதனால் கருதப்படுவது என்ன?

(ஆ) உற்பத்தி நிறுவனமொன்றைப் பொறுத்தவரையில் முறையான இருப்புக் கட்டுப்பாட்டு அமைப்பொன்றை வைத்திருப்பது ஏன் அவசியமானது? (04 புள்ளிகள்)

(iv) (அ) வாடிக்கையாளின் பெறுமதி ($Customer\ Value$) வாடிக்கையாளர் திருப்தி ($Customer\ Satistaction$) என்றால் என்ன என்பதை விளக்குக.

(ஆ) "சந்தைப்படுத்தல் எண்ணக்கரு" என்பதனால் கருதப்படுவது யாது? (04 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

Scanned with CamScanner

(v) பொருட்களுக்கான சந்தைப்படுத்தல் கலவை மாறிகள் விற்பனையாளர் நோக்கிலும் வாடிக்கையாளர் நோக்கிலும் எவ்வாறு தோன்றும் என விளக்குக. (04 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

07) (i) "உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை போட்டியாளர்களுடைய உற்பத்திப் பொருட்களில் இருந்து நுகர்வோர் வேறுபடுத்தி இனங்காண்பதற்கான சின்னங்களைப் பயன்படுத்துகின்றார்கள்"

(அ) நல்ல சின்னமொன்றில் இருக்க வேண்டிய நான்கு பிரதான பண்புகளைக் குறிப்பிடுக.

(ஆ) சின்னங்களை இடுவதனால் வாடிக்கையாளருக்குக் கிடைக்கின்ற நன்மைகள் எவை? (04 புள்ளிகள்)

(ii) (அ) இன்று தமது உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நுகர்வோரை ஊக்குவிக்கும் வகையில் உற்பத்தியாளர்களால் மேற்கொள்ளக்கூடிய நான்கு உபாயங்களைத் தருக.

(ஆ) வெற்றிகரமான சந்தைப்படுத்தலுக்கு (1) விநியோகம் (2) விலையிடல் என்பவை எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றன எனத் தனித்தனியாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) (அ) விநியோகம் மற்றும் விநியோக வழிமுறை என்பவற்றுக்கு இடையே காணப்படும் தொடர்பினைச் சுருக்கமாக விளக்குக.

(ஆ) நிறுவனமொன்றின் உற்பத்திப் பொருட்களுக்கான விநியோக வழிமுறையை தீர்மானிக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகளை உதாரணங்களுடன் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) நிறுவனமொன்று நிதித் தேவையினை நிறைவு செய்துகொள்ளும் போது கருத்திற் கொள்ள வேண்டிய நான்கு அடிப்படைக் காரணிகளை எழுதுக.

(ஆ) நிதிச் சந்தையின் அமைப்பு முறையின் சந்தைகள் நான்கு குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(v) ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான நான்கு அகநிதிமூலங்களையும் நான்கு புற நிதிமூலங்களையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

agaram.lk

08) (i) வங்கிகளின் வைப்புக்களுக்கான வட்டி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் பங்குச்சந்தை முதலீட்டில் ஒரு அதிகரிப்பு காணப்படுகின்றது.

(அ) கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலப்படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்ய விரும்பும் ஒருவருக்கு நீர் வலியுறுத்திக் கூறக்கூடிய நான்கு காரணிகளை எழுதுக.

(ஆ) கொழும்பு பங்குச் சந்தையின் முதலீட்டாளர்களுக்கு பங்குச் சந்தை விலைச் சுட்டெண்களின் முக்கியத்துவத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) (அ) மத்திய வைப்பக முறைமையினால் (*Central Depository System*) நிறைவேற்றப்படும் நான்கு தொழிற்பாடுகளை எழுதுக.

(ஆ) பங்குச் சந்தையில் தொழிற்படும் நடுவர் என்ற வகையில் தரகு முகவர் நிறுவனத்தின் மூலம் நிறைவேற்றப்படும் நான்கு சேவைகளை சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) வாடிக்கையாளரை திருப்திப்படுத்தக் கூடியதாக சந்தைப்படுத்துவோர் தமது உற்பத்திப் பொருட்களை பல்வேறு மட்டங்களின் அடிப்படையில் முன்வைக்கின்றனர். அதனை வரிசைக் கிரமமாகக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) (அ) மனிதவள முகாமைத்துவத்தின் நான்கு முக்கியமான நோக்கங்களைக் குறிப்பிடுக.

(ஆ) ஒரு முகாமை அடுத்து வரும் ஆண்டிற்கான தமது மனித வளத் தேவைகளை எதிர்வு கூறும் போது கருத்திற் கொள்ள வேண்டிய நான்கு காரணிகளை எழுதுக. (04 புள்ளிகள்)

(v) (அ) அகரீதியாக ஊழியர்களை சேர்த்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் முறைகள் எவை?

(ஆ) அகத்தே உள்ள ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதில் உள்ள அனுகூலங்கள் இரண்டு பிரதிகூலங்கள் இரண்டு குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(20 புள்ளிகள்)

Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

	புள்ளித்திட்டம்	தரம் :- 13(2016)

வணிகக்கல்வி – I

01)	2	07)	1	13)	1	19)	2	25)	5
02)	4	08)	5	14)	3	20)	4	26)	3
03)	2	09)	3	15)	5	21)	2	27)	2
04)	2	10)	4	16)	4	22)	2	28)	4
05)	4	11)	2	17)	1	23)	4	29)	2
06)	4	12)	5	18)	3	24)	1	30)	4

($30 \times 2 = 60$ புள்ளிகள்)

31) (அ) வாடிக்கையாளர், கடன்வழங்குனர் ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

(ஆ) வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

32) (அ) சமூகப் பொறுப்பு, வணிகவிழுமியம் ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

(ஆ) தேவை, விருப்பம் ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

33) (அ) எழுத்துமூலமான, வெளியக ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

(ஆ) உறுதிப் பொறுப்பு, நட்ட அச்சம் ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

34) (அ) CEYPETCO, IOC ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

(ஆ) 1. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்
2. கூட்டுறவு கிராமிய வங்கிகள்
3. சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

35) (அ) வணிகப் பத்திரம் (1 புள்ளி)

(ஆ) 1. நாணயக் கடிதம்
2. வங்கி ஆணை
3. இலத்திரனியல் கொடுப்பனவு முறை ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

36) (அ) தொழில்நுட்பத்திறன் (1 புள்ளி)

(ஆ) கட்டளையின் ஓரினத் தன்மை (1 புள்ளி)

37) (அ) ஜனநாயக தலைவர், தலையிடாத் தலைவர் ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

(ஆ) 1. காசு வரவு செலவுத்திட்டம்
2. மூலதன வரவு செலவுத் திட்டம் ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

38) (அ) 1. செயன்முறை தள அமைப்பு
2. உற்பத்திப் பொருள் தள அமைப்பு
3. கலத்தள அமைப்பு
4. நிலையான தள அமைப்பு ($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

agaram.lk

Scanned with CamScanner

(ஆ) 1. தர உறுதி
2. பூச்சிய வழு
3. தரவட்டம்
4. தரநியமம்
5. மொத்தத் தர முகாமைத்துவம்
6. புள்ளிவிபர செயன்முறைக்கட்டுப்பாடு $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

39) (அ) வியாபாரக்குறி (1 புள்ளி)
(ஆ) மீறல் பலகை (1 புள்ளி)

40) (அ) 1. வேலை விபரணம்
2. வேலை குறித்துரைத்தல் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)
(ஆ) ஆட்சேர்ப்பு, தெரிவு செய்தல் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

41) 1. சந்தையில் நிலைத்திருத்தல்
2. இலாபத்தை உச்சப்படுத்தல்
3. விற்பனையை உச்சப்படுத்தல்
4. சந்தைப்பங்கினை அதிகரித்துக் கொள்ளல் $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

42) (அ) 1. சந்தை விரிவாக்கம்
2. போட்டி நிலை
3. சுதந்திர வர்த்தகம்
4. பூகோளமயம் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)
(ஆ) 1. நுகர்வோர் விவகார அதிகாரசபை
2. இலங்கை தர கட்டளைகள் நிறுவகம்
3. சுகாதாரத் திணைக்களம்
4. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

43) 1. முயற்சியாண்மையின் திறன் குறைவாயிருத்தல்.
2. முகாமைத்துவத்தின் பலவீனங்கள்.
3. நிதியீட்டலில் காணப்படும் சிரமம்.
4. வணிகத் திட்டம் இல்லாமை.
5. உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாகக் காணப்படாமை.
6. நவீன தொழில்நுட்பங்களைப் பயப்படுத்தாமை.
7. சந்தைப்படுத்தல் பிரச்சினைகள்.
8. தெரிவு செய்த இடம் பொருத்தமின்மை. $(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

44) (அ) 1. சட்டப் பணம்
2. வங்கிப் பணம்
3. அண்மிய பணம்
4. இலத்திரனியல் பணம் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)
(ஆ) 1. செயற்திட்ட அறிக்கைளைத் தயாரித்துக் கொடுத்தல்
2. நிதி மற்றும் சந்தைப்படுத்தல் சேவை
3. ஒப்புறுதிச் சேவை அளித்தல்
4. குத்தகைச் சேவை வழங்குதல் $(2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

45) 1. காசோலை இலக்கம்
2. வங்கியின் இலக்கம்
3. வங்கிக் கிளையின் இலக்கம்
4. வங்கிக் கணக்கின் இலக்கம்
(ஒழுங்குமுறைப்படி எழுதினால் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

agaram.lk
Scanned with CamScanner

46) 1. வலைப்பின்னலினூடாக கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் தொடர்புறுதல்
2. வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்கமைத்துக் கொள்ளல்
3. பொருள் விற்பனை, கொள்வனவு நடவடிக்கைகள் நடைபெறல்
4. கொடுப்பனவு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படல் (ஒழுங்குமுறைப்படி எழுதினால் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

47) 1. தொழிற்பாட்டு அடிப்படை
2. உற்பத்திப் பொருள் அடிப்படை
3. வாடிக்கையாளர் அடிப்படை
4. பூகோள அடிப்படை
5. கலவை அடிப்படை ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

48) 1. பொருள் நிதியம்
2. பொருளின் தன்மை
3. பொருளின் விலை
4. பண்ட வழங்கலின் வேகம்
5. வழங்குனரின் நம்பிக்கைத் தன்மை
6. ஒப்பந்தக் காலம்
7. கொடுப்பனவு நிபந்தனைகள் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

49) 1. பங்குலாபம்
2. வட்டி
3. ஒதுக்குகளை மூலதனமாக்கல்
4. உரித்து வழங்கல்
5. மூலதன இலாபம்
5. பங்குப் பிளவு ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

50) 1. பதவியின் பெயர்
2. வயது எல்லை
3. வேலை நிபந்தனைகள்
4. கல்வி மற்றும் தொழில்சார் தகமைகள்
5. அனுபவம்
6. சம்பளத்திட்டம் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

agaram.lk

வணிகக்கல்வி – II

பகுதி - I

01) (i) (அ) 1. நேர் உற்பத்தி
2. மிகை உற்பத்தி
3. பண்டமாற்று
4. வியாபாரம்
5. பணப் பாவனை
6. துணைச் சேவைகள்
7. கைத்தொழில் புரட்சியும் பேரளவு உற்பத்தி
8. இலத்திரனியல் வர்த்தகம்
9. இலத்திரனியல் வணிகம் (ஒழுங்குமுறைப்படி எழுதினால் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் எந்தவொரு பொருளாதார செயற்பாடுகளும் வணிகமாகும். இதன் படி மனிதனுக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் பெறுவதற்கு தொழில் வாய்ப்பை வழங்குவதினூடாக அவைகளை வாங்குவதற்கான பொருளாதார சக்தியையும் இவ்வணிகம் வழங்குகின்றது. (2 புள்ளிகள்)

Scanned with CamScanner

(ii) (அ) உற்பத்தி :- வளங்களை பொருட்கள் அல்லது சேவைகளாக மாற்றுகின்ற செயன்முறை உற்பத்தி எனப்படும்.

நிதி :- மூலதனத்தைப் பெறுதல், பயன்படுத்தல், கணக்கீட்டுச் செயற்பாடுகள் போன்றவை.

நிர்வாகம் :- வணிகச் செயற்பாடு தொடர்பான ஆவணங்களைப் பராமரித்தல், தொடர்பாடல் கருமங்களைச் செயற்படுத்தல் தகவல் முகாமைத்தும் என்பன

சந்தைப்படுத்தல் :- வாடிக்கையாளர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் இனங்கண்டு அவற்றை நிறைவு செய்வது போன்ற நடவடிக்கைகள்.

மனிதவளக் கருமங்கள் :- ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, தெரிவு செய்தல், இணைத்துக் கொள்ளல், பயிற்சியளித்தல், மதிப்பீடு நலன்புரி என்பவை தொடர்பானவை.

ஆய்வு அபிவிருத்தி :- வெளியீட்டின் தரத்தினை மேம்படுத்துவதற்காக புதிய வெளியீட்டு முறைகளை தேடுதல் போன்ற நடவடிக்கைகள்.

(குறிப்பிட $2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

(விளக்கம் $2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

(ஆ) 1. பூகோளமயமாதல்
2. இலத்திரனியல் வணிகம்
3. இலத்திரனியல் பணம்
4. சூழல் தொடர்பாக ஆர்வம் காட்டல்
5. வணிகச் சமூகப் பொறுப்புக்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளல்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) (அ) 1. தேயிலை
2. தொங்கு உற்பத்திகள்
3. வாசனைத் திரவியங்கள்
4. சிறு வேளாண்மை உற்பத்திகள்
5. இறப்பர்

(ஒழுங்குமுறைப்படி எழுதினால் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

agaram.lk

(ஆ) இயற்கையாகக் கிடைக்கப் பெறும் வளங்களின் அடிப்படைத் தன்மையில் எவ்வித மாற்றமும் செய்யாது பயன்படுத்துதல் முதல் நிலை உற்பத்தி எனலாம்.

(விளக்கியிருப்பின் $\frac{1}{2}$ புள்ளி)

உதாரணம் :- விவசாயம்
மீன் பிடித்தல்
சுரங்க மறுத்தல்

(உதாரணம் $\frac{1}{2}$ புள்ளி)

முதனிலை உற்பத்தி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களை உரு மாற்றம் செய்தல் இரண்டாம் நிலை உற்பத்தியாகும்.

(விளக்கியிருப்பின் $\frac{1}{2}$ புள்ளி)

உதாரணம் :- தயாரிப்பு, நிர்மாணித்தல்

(உதாரணம் $\frac{1}{2}$ புள்ளி)

(iv) (அ) 1. வணிகமொன்றின் அகச்சூழலை அறிந்து கொள்வதினூடாக வணிகத்தின் பலங்கள் மற்றும் பலவீனங்களை இனங்காண முடியும். இதனால் அப் பலங்களை வணிகத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த முடிவதுடன் பலவீனங்களைத் தவிர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.

2. வணிகமொன்றின் புறச்சூழலை அறிந்து கொள்வதனூடாக அவ்வணிகத்தில் காணப்படும் வாய்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் இனங்கண்டு கொள்ள முடியும். வணிகங்களுக்கு அவ்வாய்ப்புக்களை வணிகத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கும், அச்சுறுத்தல்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கும் முடியும்.

(விளக்கியிருப்பின் $2 \times 1 = 2$ புள்ளிகள்)

Scanned with CamScanner

(ஆ) 1. உள்நாட்டு கலாசாரத்தில் பாதகமான மாற்றங்கள் ஏற்படுதல்
2. அதிக போட்டித் தன்மைக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுதல்
3. பயிற்சி பெற்ற ஊழியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லக்கூடிய நிலை ஏற்படுதல்
4. உள்நாட்டு வணிகங்களின் நீடித்து, நிலைப்புத் தன்மையற்ற நிலை உருவாகுதல்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(v) (அ) நுகர்வுப் பொருள்
1. வசதிப் பொருள்
2. கடைப் பொருள்
3. சிறப்புப் பொருள்
4. நாடாப் பொருள்

கைத்தொழிற் பொருள்
1. மூலதனப் பொருள்
2. மூலப் பொருட்களும் உதிரிப்பாகங்களும்
3. வழங்கலும் வணிகச் சேவைகளும்

(பூரண விடைகளுக்கு $1 + 1 = 2$ புள்ளிகள்)

(ஆ)
1. உரிமையாளர்கள் :- இலாபம், அபவிருத்தி, சந்தைப் பங்கு
2. முகாமையாளர்கள் :- இலாபம், வணிகத்தின் வளர்ச்சி, எடுத்த தீர்மானங்களின் வெற்றிகரத் தன்மை, தொழில் அபிவிருத்தி
3. ஊழியர்கள் :- சம்பளம், மேலதிகக் கொடுப்பனவுகள், வேலையில் திருப்தி, தொழில் பாதுகாப்பு, பதவி உயர்வு
4. வழங்குனர்கள் :- கட்டளைத் தொடர்ந்து பெறலும், பணத்தை உரிய நேரத்தில் மீள் அறவிடலும்.
5. வாடிக்கையாளர்கள் :- தரமான பொருட்கள் அல்லது சேவைகள், நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளல், வணிகத்தின் உறுதிப்பாடு, பொறுப்புக்களை ஒழுங்காக நிறைவேற்றல்
6. அரசு :- வரி, வேலைவாய்ப்பு, பொருளாதார அபிவிருத்தி
7. சமூகம் :- சூழலைப் பாதுகாத்தல், வேலை வாய்ப்புக்கள் சமூக நலன்
8. போட்டியாளர்கள் :- விற்பனை உபாயங்களை தீர்மானம் செய்தல், தகவல்களை அறிந்து கொள்ளல், போட்டி நிலைமைகளுக்கு முகம் கொடுத்தல்.
9. கடன் வழங்குனர்கள் :- கடன் பணத்தின் பாதுகாப்பு, மீளப்பெறும் திறன், பிணைப்புகளின் பாதுகாப்பு
10. எதிர்கால முதலீட்டாளர்கள் :- எதிர்காலத்தில் தமது வளங்களை முதலீடு செய்வதற்கு

(இருதரப்பினைக் குறிப்பிட $2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)
(இருதரப்பினை விளக்க $2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

02) (i) (அ) 1. வணிகங்களினால் அறவிடப்படுகின்ற வருமானங்கள் அரசு உட்கட்டமைப்பு வசதிகளினை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தல்.
2. இறக்குமதியின் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற பல்வேறு வரிகள் காரணமாக உள்நாட்டுக் கைத்தொழில் / உற்பத்தி போன்ற துறைகள் பாதுகாக்கப்படல்.
3. உற்பத்தியின் அடிப்படையில் உற்பத்திகளின் மீது பல்வேறு வகையான வரிகள் விதிக்கப்படுவதன் காரணமாக பொருட்களின் விலை உயர்வடைதல்.

($2 \times 1 = 2$ புள்ளிகள்)

(ஆ) குறித்த நபர் அல்லது நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட வரி நேர்வரி ஆகும்.

(விளக்கியிருப்பின $\frac{1}{2}$ புள்ளி)

உதாரணம் :- வருமான வரி
கம்பனிகள் வரி, மூலதன இலாபவரி

(உதாரணம் $\frac{1}{2}$ புள்ளி)

செலுத்தப்பட்ட வரியினை இன்னொருவர் மேல் சுமத்தக்கூடியதான வரி நேரில் வரி ஆகும்.

(விளக்கியிருப்பின $\frac{1}{2}$ புள்ளி)

உதாரணம் :- பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (*VAT*)
சுங்க வரி
உற்பத்திப் பொருள் வரி

(உதாரணம் $\frac{1}{2}$ புள்ளி)

agaram.lk

Scanned with CamScanner

(ii) நுகர்வோரிற்கு

1. சரியான விலையில் பொருளை பெற்றுக் கொள்ளலாம்.
2. தரமான பொருளை பெற்றுக் கொள்ளலாம்.
3. போட்டி விலையில் பொருளை பெறலாம்.
4. வியாபார மோசடிகளில் இருந்து நுகர்வோர் பாதுகாக்கப்படுவர். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

வணிக சமூகம்

1. பொருட்களின் விலையை காட்சிப்படுத்துவதால் விற்பனையை அதிகரிக்க முடிதல்
2. போட்டித் தன்மையை ஏற்படுத்தல்
3. நுகர்வோரின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளலாம்.
4. ஒரு தரத்திற்கேற்ப பொருளை உற்பத்தி செய்வதால் செலவு குறைவடைதல்
5. வர்த்தக நடவடிக்கையை சிறந்த முறையில் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) (அ)
1. தரங்களை உருவாக்குதல்
2. தரங்களை செயற்படுத்தல்
3. *ISO* தரப்படுத்தலினை அமுல்படுத்தல்
4. நியமப்படுத்தல், தரப்படுத்தல் தொடர்பான பயிற்சிப் பாடநெறிகளை ஏற்பாடு செய்தல்
5. நியமப்படுத்தல், தரப்படுத்தல் என்பவற்றை விருத்தி செய்தல்
6. அளவைக் கருவிகளை முறைப்படுத்தல்
7. நுகர்வோர் கல்வியைப் பிரசித்தப்படுத்தல்
8. நூலக சேவை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தர வெளியீடுகள்
9. தேசிய தர விருதுகளை வருடாந்தம் வழங்கல் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ)
1. சிறந்த செயற்பாடு
2. நீண்டகாலம் நிலைத்திருத்தல்
3. நம்பிக்கைத் தன்மையைக் கொண்டிருத்தல்
4. நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல்
5. உரிய கருமத்திற்குப் பொருத்தமாய் இருத்தல்
6. பாதுகாப்பானதாக இருத்தல் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

agaram.lk

(iv) (அ)
1. பங்காளர் 2 - 20 பேர் காணப்படல் வேண்டும்.
2. பங்காளரிடையே ஒப்பந்தமொன்று காணப்படல் வேண்டும்.
3. ஏதாவது வணிக முயற்சியொன்று நடைபெறல்
4. இலாபப் பங்கீட்டுக்கான ஒப்பந்தமொன்றைக் காணக்கூடியதாகவிருத்தல்
5. சகல பங்காளர்களையும் தன்னையும் ஏனைய பங்காளர்களையும் பிரதிநிதியொருவராக அல்லது தலைவராக மதித்தல் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ)
1. பங்குடைமை வணிகத்தின் பெயரும் முகவரியும்.
2. பங்காளர் மூலதன பங்களிப்பு விகிதம்
3. பங்காளருக்கிடையே இலாப நட்டம் பகிரும் முறை
4. பங்காளர் பற்றுக்கள்
5. பங்காளர் பற்று வட்டி வீதம்
6. பங்காளர் சம்பளம் வழங்கும் முறை
7. பங்காளர் சேர்தல், விலகல்
8. மேலதிக மூலதனத்திற்கான வட்டி
9. பங்காளர் உரிமை கடமை
10. பங்குடைமை கலைப்பு முறை

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(v) (அ) இலங்கையில் பதிவு செய்யப்பட்டு வெளிநாட்டில் வியாபாரத்தை மேற்கொள்ளும் கம்பனி (2 புள்ளிகள்)

(ஆ) உள்நாட்டில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியாது. (2 புள்ளிகள்)

Scanned with CamScanner

03) (i) (அ) 1. தமது திறமைகளை உச்சமட்டத்தில் பயன்படுத்துவதற்கான விருப்பம்.
2. சமூகத்தில் காணப்படும் ஏதேனுமொரு பிரச்சினையைத் தீர்ப்பதில் பங்கேற்பதற்கான விருப்பம்.
3. தொழில்களினூடாக பெற்றுக் கொண்ட அனுபவம்
4. குறித்த ஒரு துறை தொடர்பாகப் பெற்றுள்ள கல்வியும் பயிற்சியும்
5. பொழுது போக்காகச் செய்கின்ற கருமம் வணிகமொன்றாக மாற்றமடைதல்
6. முயற்சியாளர்கள் தோற்றம் பெறுவதற்கு பொருத்தமான சமூகப் பொருளாதாரப் பின்னணி காணப்படல்
7. வணிகத்தின் உரிமையாளராக தானே இருக்க வேண்டும் என்ற விருப்பம்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. பாரிய வணிகங்களுடன் ஒப்பிடும் போது கூடுதலான வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடியுமாய் இருத்தல்.
2. தேசிய உற்பத்தியின் அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்த முடியுமாயிருத்தல்
3. பாரிய அளவு கைத்தொழில்களுக்கு தேவையான மூலப் பொருட்கள், சேவைகளை வழங்குதல்
4. உள்நாட்டு மற்றும் பிரதேச வளங்களின் உச்சப் பயன்பாடு
5. மக்களின் வருமானம் மட்டம் அதிகரித்தல்
6. பாரிய வணிகங்கள் மேற்கொள்ளாத வணிகக் கருமங்களை மேற்கொள்ளல்
7. பிரதேச அபிவிருத்தி ஏற்படுவதுடன் நகரமயமாக்கல் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறைவடைதல்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ii) 1. சுயமதிப்பீடு :- முதலாவதாக முயற்சியாண்மைத் தேர்ச்சிகளை உறுதியாக இனங்கண்டு அத்தேர்ச்சிகள் தன்னுள்ளே எந்தளவிற்குக் காணப்படுகின்றன? தன்னிடமில்லாத தேர்ச்சிகள் எவை? மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் எவை? என்பவைத் தொடர்பான சுயமதிப்பீட்டின் மூலம்.

2. பயிற்சி வேலைத்திட்டம் :- முயற்சியாண்மை தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்வதற்குக் காணப்படுகின்ற பல்வேறு பயிற்சி வேலைத்திட்டங்கள் மூலம்

3. முயற்சியாண்மைக் கல்வி :- சாதாரண கல்விக்கு மேலதிகமாக முயற்சியாண்மை தொடர்பாகப் பெறுகின்ற கல்வியின் மூலம்

4. அனுபவம் :- வேறு முயற்சியாண்மைக் கருமங்களை மேற்கொள்ளும் போது அல்லது தானே முயற்சியாளரொருவராக வேலை செய்யும் போது கிடைக்கின்ற அனுபவங்கள் மூலம்.

(குறிப்பிட $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(விளக்கம் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) (அ) 1. பொதுவாக ஏற்றுக்கொள்ளும் தன்மை காணப்படல்.
2. மிக நீண்ட காலத்திற்குப் பயன்படுத்தக்கூடிய தன்மை இருத்தல்.
3. அருமைத் தன்மை கொண்டதாக இருத்தல்.
4. போலிகளை உருவாக்க முடியாமை.
5. இலகுவாக கொண்டு செல்லக்கூடிய தன்மை காணப்படல்.
6. இலகுவாக இனங்காணக் கூடியதாக இருத்தல்.
7. சிறு சிறு அலகுகளாக பிரிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருத்தல்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. நாணயக் கொள்கைகளை அமுல்படுத்தல்.
2. நாணய மாற்றுவீதங்களை அமுலாக்கல்.
3. இலங்கையின் சட்டபூர்வமான வெளிநாட்டு ஒதுக்கங்களை முகாமை செய்தல்.
4. வங்கியினதும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களினதும் கண்காணிப்பாளராக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

agaram.lk

Scanned with CamScanner

5. அரசின் பொருளாதார ஆலோசகராகவும் வங்கியாளராகவும் நிதி முகவராகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
6. நாணயங்களை வெளியீடு செய்தலும் அவற்றைப் பங்கீடு செய்தலும்.
7. மத்திய வங்கியில் தீர்பனவுக் கணக்குகள் பேணும் வணிக வங்கிகளுக்கும் முதன்நிலை வியாபாரிகளுக்கும் தீர்ப்பனவு செய்யும் வசதிகளை வழங்கல்.

$(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iv) (அ) 1. குறுக்குக் கோடிடப்பட்ட காசோலையை ஒரு வங்கிக் கணக்கின் ஊடாகவே பணமாக்க முடியும்.
2. மோசடி நடந்தால் தொடர்புடையவரை அல்லது மோசடி செய்தவரை வங்கிக் கணக்கின் மூலம் கண்டறிய முடியும்.
3. கைமாற்றத்தகாதது எனும் குறுக்குக் கோடிடலில் காசோலையை பிறப்பித்தவருக்கு விசேட பாதுகாப்புக் கிடைக்கும்.

$(2 \times 1 = 2$ புள்ளிகள்)

(ஆ)

நடைமுறைக்கணக்கு	சேமிப்புக் கணக்கு
1. முகாமையாளரின் அனுமதி தேவை	1. கருமபீடத்தில் உரிய பத்திரங்களைப் பெற்று ஆரம்பிக்க முடியும்.
2. ஆரம்ப வைப்புத் தொகை வங்கிக்கு வங்கி கிழைக்கு கிளை வேறுபடும்	2. ஆகக் குறைந்த ஒரு தொகையுடன் ஆரம்பிக்க முடியும்.
3. நடைமுறைக் கணக்கு வைத்திருக்கும் ஒருவரால் அறிமுகப்படுத்தல் அவசியம்	3. அடையாள அட்டை மூலம் அறிமுகம் செய்தல்.

$(2 \times 1 = 2$ புள்ளிகள்)

(v) (அ) 1. பல்வேறு வகையான முதலீடுகளில் முதலீடு செய்வதன் காரணமாக நட்ட அச்சம் குறைவடைதல்
2. முதலீட்டு முகாமைத்துவ தொழில்சார் முகாமையாளர்களது சேவைகளைப் பெறமுடிதல்.
3. சிறிய முதலீட்டாளர்கள் பாரிய மூலதன முதலீட்டுக்கு உரிய பேரளவு வணிக நலன்களை அடைய முடியும். (மூலதன இலாபம், பங்குலாபம்)
4. முதலீட்டை மீண்டும் பணமாக பெறக்கூடிய வாய்ப்புக் கிடைத்தல் / திரவத் தன்மை அதிகம்.
5. முதலீட்டாளர் தமது முதலீட்டு நோக்கம் நட்ட அச்ச மட்டம் என்பவற்றிற்குப் பொருத்தமான நிதியத்தை தெரிவு செய்து கொள்ளமுடியும்.

$(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. வாழ்நாளில் ஒப்பந்தக் காலம் முடிவுற்றால் ஒப்பந்தத் தொகையுடன் உபகாரப் பணத்தையும் பெறமுடிதல்.
2. ஆயுள் உறுதிப் பத்திரத்தை பிணையாக வைத்து கடன் பெறமுடிதல்.
3. விபத்துக்கள் காரணமாக உடல் பாதிப்புக்கள் ஏற்பட்டால் நட்டஈடு பெறலாம்.
4. அங்கீகரிக்கப்பட்ட நோய்களுக்கு சிகிச்சை பெற்றதற்காக மருத்துவச் செலவைப் பெறலாம்.
5. தவணைக் கட்டணத் தொகையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒப்பந்தத்தை ரத்துச் செய்து ஒப்படைப்புப் பெறுமதியை பெறமுடிதல்.
6. பிள்ளைகளின் திருமணம், கல்வி நடவடிக்கைகளின் போது நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

$(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

04) (i) (அ) 1. கூட்டங்கள் எல்லா பிரச்சினைகளையும் சந்தேகங்களையும் கலந்துரையாடி தீர்க்கக் கூடியன.
2. தொடர்புபடுவோருக்கு இடையிலான கால தாமதங்கள் குறைக்கப்படுகின்றன.
3. புரிந்துணர்வுகளை வளர்க்கின்றது.
4. கூட்டுத் தீர்மானங்களுக்கு எல்லோரையும் பிரச்சினைகள் இன்றி இணங்க வைக்கின்றன.

$(4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

agaram.lk

Scanned with CamScanner

(ஆ) 1. கூட்டங்களில் கலந்து கொள்வோர் தாமதமாக வருகை தரல் (*Late Arrivals*)
2. சரியான நிகழ்ச்சி நிரலின்மை
3. பொருத்தமற்றவர்களைக் கூட்டத்திற்கு அழைத்தல்.
4. தெளிவான, இறுதியான தீர்மானம் மேற்கொள்ள முடியாமை.
5. நீண்ட நேரம் கூட்டத்தினை நடத்துதல்.
6. கூட்டங்களில் கலந்து கொள்வோர் போதிய ஆயத்தமின்றி கூட்டங்களில் கலந்து கொள்ளல். இதனால் போதிய பங்களிப்பினை வழங்க முடியாது. ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ii) (அ) 1. உற்பத்தியாளருக்கு இடம் தொடர்பான திருப்தி ஏற்படும்.
2. வணிகத்திற்கு தேவையான மூலப் பொருட்களையும், ஊழியர்களையும் இலகுவாகப் பெறலாம்.
3. பொருட்களின் விநியோகத்தை விரைவாக மேற்கொள்ளலாம்.
4. பொருட்கள் பழுதடையும் தன்மை குறைவடையும்.
5. உற்பத்திச் செலவை இழிவுபடுத்திக் கொள்ளலாம்.
6. சமூகத் தொடர்புகள் விரிவடையும்.
7. நுகர்வோரை சந்தைக்கு கொண்டு வருதல் இலகு. ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. நவீன முகாமைத்துவ நுட்பமுறைகளைப் பயன்படுத்தல்
2. பொதுவாக பாரியளவான சில்லறை வியாபார நிலையங்களை நடாத்திச் செல்லுதல்.
3. அதிகளவான இருப்புக்களைப் பேணாது தேவையான அளவுகளில் உடனடியாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
4. கணினி மயப்படுத்தப்பட்ட விலைக் குறியீடு (*Bar code*)
5. கடனட்டை மூலம் கொடுப்பனவுகளைச் செய்தல்.
6. வாடிக்கையாளர்களுடன் வலையமைப்புத் தொடர்புகளைப் பேணுதல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii)

	முகவர்	தொழிற்பாடு
1.	தரகர்	- விற்பவரையும், வாங்குபவரையும் சந்திக்க வைத்தல்
2.	தரகுமுகவர்	- முதல்வருக்காக பொருட்களை கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்து தரகினை பெற்றுக் கொள்பவர்.
3.	காரணிகர்	- முதல்வரின் சார்பாக தனது பெயரில் பொருட்களைக் கொள்வனவு செய்ய விற்பனை செய்ய அதிகாரமுடையவர்.
4.	பொறுப்புமுகவர்	- முதல்வர் சார்பாக கடன் விற்பனைகளுக்கான வருமதிகளை வசூலித்தல்.
5.	ஏலவர்	- முதல்வரின் பொருட்களை திறந்த, வாய்மொழி மூலம் உயர் விலையினை முன்வைக்கும் கொள்வனவாளருக்கு விற்பனை செய்து ஏல விற்பனைக் கட்டணத்தைப் பெறுபவர்.

(குறிப்பிட $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(விளக்கம் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iv) (அ) 1. பொருட்களை விநியோகிப்பது இலகுவாக அமைதல்.
2. தமது பொருட்களை அறிமுகப்படுத்துவது இலகுவாக அமைதல்.
3. உற்பத்தியாளரின் கருமங்கள் இலகுவாதல்.
4. சந்தை தகவல்களை உரிய தரப்பினருக்கு இலகுவாக பெற்றுக் கொள்ள முடியுமாயிருத்தல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)
5. சந்தையை விரிவுபடுத்த முடிதல்.

(ஆ) கப்பல் தளப்பத்திரம்
சுங்கத் திணைக்களத்திற்குப் பண்டங்களை ஒப்படைத்த பின் அப்பண்டங்கள் பொறுப் சுங்கத் திணைக்களத்தினால் ஏற்றுமதியாளருக்கு பேறகப்பட்டது என்பதைக் குறிப்பிட்டு சுங்கத் திணைக்களத்தினால் ஏற்றுமதியாளருக்கு வழங்கும் ஆவணமாகும்.

agaram.lk

Scanned with CamScanner

ஏற்றுமதிக் குறிப்பு

தான் ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கின்ற பண்டங்கள் தொடர்பான பூரண விபரங்களை உள்ளடக்கி ஏற்றுமதி நாட்டின் சுங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணமாகும். (2 × 1 = 2 புள்ளிகள்)

(v) (அ) 1. ஏற்றுமதி இறக்குமதியின் போது அதிக சுங்கத் தீர்வை
2. இறக்குமதிகளை மட்டுப்படுத்தல்.
3. ஏற்றுமதி இறக்குமதிகளைத் தடை செய்தல்.
4. வர்த்தக ஒப்பந்தங்கள்
5. இறுக்கமான நாணயமாற்றுக் கொள்கைகள் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. கொடுக்கல் வாங்கல் விரைவாக நடைபெறும்.
2. சந்தை பங்கு விரிவாகுதல்.
3. பொருட்களை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் அதிகம்.
4. உற்பத்திப் பொருட்களது விலை பொதுவாகக் குறைவடைதல்.
5. இடைநடுவர்கள் தேவையில்லை.
6. ஆவணப் பயன்பாடுகள் குறைவு. ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

பகுதி - II

05) (i) (அ) முகாமைத்துவம் என்பது வேறுபட்ட வணிகச் சூழலினுள் காணப்படும் நிறுவனமொன்றில் வெளிப்படுத்தப்பட்ட நோக்கங்களையும் இலக்குகளையும் வினைத்திறனாக அடைந்து கொள்வதற்கு நிறுவனத்தின் வரையறுக்கப்பட்ட வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தும் செயற்பாடாகும். (2 புள்ளிகள்)

(ஆ) திட்டமிடல் மூலம் இலக்குகள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள தீர்மானிப்பதுடன் அந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள தேவையான வளங்களை ஒழுங்கமைத்தல் மூலம் ஒதுக்கீடு செய்து கொள்ளலாம். நெறிப்படுத்தல் மூலம் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான வளங்களைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டலை கண்டு கொள்ளலாம். கட்டுப்பாட்டின் மூலம் தமது இலக்குகள் நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளதா என்பதை அறியக் கூடியதாக உள்ளது. இதன் காரணமாக இவ் ஒவ்வொரு தொழிற்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது. (2 புள்ளிகள்)

(ii) (அ) 1. நோக்கத்தையும் இலக்கையும் தீர்மானித்தல்
2. நோக்கத்தையும் இலக்கையும் அடைவதற்குத் தேவையான செயற்பாடுகளை தீர்மானித்தல்.
3. செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு வளங்களை ஒதுக்கீடு செய்தல்.
4. முறைகளையும் உபாய வழிமுறைகளையும் எழுத்து வடிவில் முன்வைத்தல் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. நோக்கம் இலக்கு என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.
2. பிரயோக ரீதியாக செயற்படுத்த முடியுமாயிருத்தல்.
3. நெகிழ்வுத் தன்மையுடையதாயிருத்தல்.
4. விளங்கிக் கொள்வது இலகுவாயிருத்தல்.
5. குறித்தகால வரையறையைக் கொண்டிருத்தல்.
6. ஏனைய முகாமைத்துவக் கருமங்களுக்கு முன் தயாரிக்கப்பட்டிருத்தலும் அக் கருமங்கள் தொடர்புபடுகின்ற முறையில் தயாரிக்கப்பட்டிருத்தலும்.
7. அனைத்து மட்டங்களிலுமுள்ள முகாமையாளர்கள் திட்டமிடலுக்கு பங்களிப்புச் செய்திருத்தல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

agaram.lk
Scanned with CamScanner

(iii) 1. **கருமங்களை இனங்காணல் :**

மேற்கொள்ள வேண்டிய கருமங்களை இனங்காணல் ஒழுங்கமைத்தலின் போது முதலாவதாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. **வேலைகளைப் பகிர்தல் :**

ஒவ்வொரு ஊழியர்களும் இலகுவாக நிறைவேற்றக்கூடிய முறையில் அனைத்து கருமங்களும் சிறியதும் எளிமையானதுமான பகுதிகளாக வேறுபடுத்துதல்.

3. **திணைக்களப்படுத்தல் :**

நிறுவனமொன்றின் கருமங்களில் காணக்கூடிய பொதுவான பண்புகளைப் பயன்படுத்தி தொழிலை தொகுதிகளாக்கும் செயன்முறை

4. **அதிகாரப் பொறுப்புக்களைக் கையளித்தல் :**

உருவாக்கப்பட்ட (நியமிக்கப்பட்ட) செயல்களைப் பூரணப்படுத்துவதற்கு உதவியாளர்களுக்கு ஒழுங்கு முறையாக அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் ஒப்படைக்கும் செயற்பாடு

5. **வேலை செய்யும் நியமங்களை உருவாக்கல் :**

வேலை செய்ய விதிமுறைகள் தொடர்பாக எவை, எவ்வாறு, எத்தினத்தில் செய்ய வேண்டும் என்பவற்றைத் தெளிவுபடுத்தல்.

6. **வளங்களைப் பகிர்ந்தளித்தல் :**

ஒழுங்கமைப்பின் செயன்முறைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்களை தேவையான அளவுகளில் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுத்தல்.

7. **ஒருமுகப்படுத்துதல் :**

அமைப்பின் குறிக்கோளை வினைத் திறனாக அடைந்து கொள்வதற்காக வெவ்வேறுபட்ட வேலைப் பிரிவுகளின் செயன்முறைகளையும் இலக்குகளையும் ஒருங்கிணைக்கும் செயன்முறை.

(ஒழுங்குமுறையில் குறிப்பிட $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(விளக்கம் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iv) (அ) நிறுவனமொன்றில் தீர்மானமெடுக்கம் போது அனைத்து அதிகாரங்களும் உயர்முகாமையில் ஒருமுகப்படுத்தப்பட்டிருத்தல் மையப்படுத்தல் எனப்படும். (1 புள்ளி)

நிறுவனமொன்றின் தீர்மானமெடுக்கம் சகல அதிகாரங்களும் உயர்மட்ட முகாமையில் இருந்து கீழ்மட்ட முகாமைக்கு ஒப்படைக்கப்பட்டிருத்தல் பன்முகப்படுத்தல் எனப்படும். (1 புள்ளி)

(ஆ) 1. **தலைமைத்துவம் :**

அமைப்பொன்றின் இலக்கினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு தனிநபர்களில் அல்லது குழுவொன்றின் நடத்தையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் இயலுமை.

2. **ஊக்குவித்தல் :**

நிறுவனமொன்றின் வேலை செய்வோரின் உச்சப் பங்களிப்பினை அவர்களின் சுயவிருப்பத்துடனும் திருப்தியுடனும் பெற்றுக் கொள்வதற்கு தூண்டுதல்.

3. **தொடர்பாடல் :**

இருவருக்கிடையில் அல்லது பலருக்கிடையில் தெளிவினை ஏற்படுத்தும் முறையில் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது தொடர்பாடல் ஆகும்.

(உதாரணம் $2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

(விபரிக்க $2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

agaram.lk

Scanned with CamScanner

(v) (அ) 1. சுய ஒழுக்கம்
2. ஆளுமைத் தன்மை
3. புத்திசாதுரியம்
4. தன்னம்பிக்கை
5. உடல், உள ஆரோக்கியம்
6. விரும்பத்தக்க தன்மை
7. செல்வாக்குச் செலுத்தும் திறன்
8. அர்ப்பணிப்பு

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. உற்பத்தியின் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்வதற்கு
2. கிரயத்தை இழிவுபடுத்திக் கொள்வதற்கு
3. தவறுகளை இழிவுபடுத்திக் கொள்வதற்கு அல்லது பூச்சிய மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு
4. சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப செம்மைப்படுத்துவதற்கு
5. நிறுவனத்தினது முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்கும் தவறுகளைத் திருத்துவதற்கும்
6. நிறுவனத்தின் செயற்பாட்டுத்திறன் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கேற்ப இடம் பெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

06) (i) (அ) 1. இயந்திரக் கட்டுப்பாடு
2. இருப்புக் கட்டுப்பாடு
3. தரக் கட்டுப்பாடு
4. கிரயக் கட்டுப்பாடு

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. உற்பத்திப் பொருளின் தரத்தினை உயர்த்துதல்.
2. உற்பத்திச் செயல்முறையின் விளைதிறனை அதிகரித்தல்.
3. உற்பத்திக் கிரயத்தினைக் குறைத்தல்
4. புதிய பொருட்கள் சேவைகளினை அறிமுகப்படுத்தல்.
5. வள விரயங்களைக் குறைத்தல்
6. மிகச் சிறப்பாக நுகர்வோரை திருப்திப்படுத்த முடிதல்.
7. போட்டிகளுக்கு முகங்கொடுக்கக் கூடியதாக இருத்தல்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

agaram.lk

(ii) (அ) 1. பாரியளவான அனுகூலங்கள் காரணமாக அலகுக் கிரயம் குறைவடைதல்.
2. பெரும்பாலும் தனிநபர் ஒருவரினாலும் உற்பத்திப் பாய்ச்சலைக் கட்டுப்படுத்த முடியுமாக இருத்தல்.
3. முழுமையான சந்தை தொடர்பாகவும் கவனஞ் செலுத்த முடிதல்.
4. நவீன தொழில் நுட்ப வசதிகளைப் பயன்படுத்த முடியுமாக இருத்தல்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. விரயத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.
2. வாடிக்கையாளரிடையே பொருட்கள் சேவைகளின் மதிப்பு அதிகரிப்பதால் கேள்வி அதிகரிக்கும்.
3. நிறுவன நன்மதிப்பு அதிகரிக்கும்.
4. போட்டிக்கு இலகுவாக முகம்கொடுக்கலாம்.

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) (அ) உற்பத்திச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு உத்தம மட்டத்தில் இருப்பிணைப் பேணல் இருப்புக் கட்டுப்பாடு எனப்படும்.

(2 புள்ளிகள்)

(ஆ) 1. குறைவான அல்லது மிகையாக இருப்புக்கள் பேணுவதால் ஏற்படுகின்ற செலவினை இழிவுபடுத்திக் கொள்ளலாம்.
2. உற்பத்திக் கருமங்களை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு
3. இயந்திர சாதனங்கள் ஊழியர்கள் போன்ற வளங்களிலிருந்து உச்சப் பயன்பாட்டினை பெற்றுக்கொள்வதற்கு

($2 \times 2 = 2$ புள்ளிகள்)

Scanned with CamScanner

(iv) (அ) **பெறுமதி**

நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு உற்பத்திப் பொருளொன்றில் காணப்படும் ஆற்றல் அல்லது பண்பு தொடர்பான வாடிக்கையாள் மேற்கொள்ளும் மதிப்பீடு பெறுமதி ஆகும். (1 புள்ளி)

திருப்தி

வாடிக்கையாளர் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலம் வாடிக்கையாளரின் திருப்தியை நிறைவு செய்ய முடியும். தேவைகள் நிறைவேற்றப்படுவதன் காரணமாக தனிநபர்களினுள் தோன்றும் உள ரீதியான உணர்வு நிலையே திருப்தி எனப்படும். (1 புள்ளி)

(ஆ) நுகர்வோர் தேவைகளையும் விருப்பங்களையும் இனங்கண்டு அதற்கு இசைவாக போட்டியாளர்களை விடவும் சிறந்த பெறுமதியில் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து சந்தைக்கு அறிமுகப்படுத்தினால் பொருட்களை விற்பனை செய்யலாம் என்பதனை வெளிப்படுத்தும் எண்ணக்கருவாகும். (2 புள்ளிகள்)

(v)

விற்பனையாளர்	-	**வாடிக்கையாளர்**
1. உற்பத்திப் பொருள்	-	நுகர்வோர் தேவைகளும் விருப்பமும்
2. விலை	-	கிரயம்
3. இடம்	-	வசதி
4. மேம்படுத்தல்	-	தொடர்பாடல்

(சரியான இணைப்புக்கு 4 × 1 = 4 புள்ளிகள்)

07) (i) (அ)
1. சுருக்கமானதும் எளிமையானதும்
2. உச்சரிப்பதற்கும், இனங்காண்பதற்கும், நினைவில் வைத்திருப்பதற்கும் இலகு வாயிருத்தல்.
3. உற்பத்தியின் அடிப்படைப் பண்புகள், நன்மைகள் தொடர்பாகக் கருத்தினை வெளிக்காட்டக்கூடியதாகவிருத்தல்.
4. இலகுவாக ஏனைய மொழிகளிலும் இனங்காணக்கூடியதாக இருத்தல்.
5. போட்டியாளர்களின் சின்னங்களை விட மிகப்பெரிய வேறுபாட்டினைக் கொண்டிருத்தல்.
6. ஏதாவது கலாசாரமொன்றினைப் பிரதிநிதித்துவம் செய்தல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ)
1. இலகுவாக பொருட்களைத் தெரிவு செய்ய முடிதல்.
2. போலிப் பொருட்களிலிருந்து பாதுகாப்பு பெறமுடிதல்.
3. தமக்குத் தேவையான பண்டத்தினைத் தெளிவாகக் கேட்டுப் பெறமுடிதல்.
4. பிரசித்தமான சிறந்த தரத்துடனான பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு இலகுவாக அமைதல்.
5. முறைப்பாடுகளை முன்வைக்க இலகுவாக அமைதல்.

(ii) (அ)
1. விற்பனைப் பொருட்களின் மாதிரிகளை இலவசமாகக் கொடுத்தல்.
2. விற்பனையின் பின் சேவைகளை வழங்குதல்.
3. பரிசுப் போட்டிகளை நடாத்துதல்.
4. பொருட்களோடு மேலதிக அன்பளிப்புக்களைக் கொடுத்தல்.
5. விற்பனை நிலையங்களை சிறந்த முறையில் காட்சிப்படுத்தல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) **விநியோகம் :**
பொருட்களை சந்தைப்படுத்தும் போது அப்பொருட்கள் நுகர்வோரிடம் இலகுவாக சென்றடைய வேண்டும். சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு விநியோகிக்க வேண்டியது முக்கியமானதாகும். சந்தைப்படுத்தல் கலவையில் ஏனைய கலவைகள் சிறப்பாகக் காணப்படினும் விநியோகம் சிறப்பாக காணப்படாதவிடத்து சந்தைப்படுத்தல் நடவடிக்கை தோல்வி அடையலாம். (1 புள்ளி)

agaram.lk
Scanned with CamScanner

விலையிடல் :

விலை நிறுவனத்தின் இலாபத்தையும் கேள்வியையும் பாதிக்கும் ஆகையால் வெற்றிகரமான சந்தைப்படுத்தலுக்குச் சரியான விலையிடல் அவசியமாகும். (உற்பத்திக் கிரயம், கேள்வி, நிரம்பல், போட்டி, நுகர்வோர் வருமானம், போட்டியாளர் விலை, பதிலீட்டுப் பொருள்விலை விநியோகக் கிரயம்) போன்ற காரணிகளை கவனத்தில் எடுத்து அதற்கேற்ப பொருத்தமான விலையினைத் தீர்மானித்தல் வெற்றிகரமான சந்தைப் படுத்தலுக்கு முக்கியமாகும்.

(1 புள்ளி)

(iii) (அ) பொருட்கள் அல்லது சேவையொன்று இலக்கு நுகர்வோரை வெற்றிகரமாக அடைந்து கொள்வதற்கான செயல்முறை விநியோகம் எனப்படும்.

(1 புள்ளி)

உற்பத்தியாளர் தொடக்கம் நுகர்வோர் வரை பொருட்கள், சேவைகள் சென்றடையும் முறை விநியோக வழிமுறை எனப்படும்.

(1 புள்ளி)

(ஆ) 1. பொருட்களின் தன்மை

(உ+ம்) நுகர்வுப் பொருளா, கைத்தொழில் பொருளா, நீடித்த பாவனை உடையதா? விரைவாக அழிவுறுகிறதா?

2. சந்தையின் தன்மை

(உ+ம்) வாடிக்கையாளர் யார்? எங்கு காணப்படுகின்றனர்? (பிரதேச ரீதியிலா தேசிய ரீதியிலா, சர்வதேச ரீதியிலா)

3. கேள்வியின் தன்மை

(உ+ம்) தொடர்ச்சியான கேள்வியா / பருவகாலத்திற்கு ஏற்ப உருவாகும் கேள்வியா?

4. உற்பத்தியாளரின் பலங்கள் :

(உ+ம்) நிதிப்பலம், களஞ்சியசாலை வசதிகள், ஊழியர் வசதிகள், போக்குவரத்து பலம்.

4. போட்டியாளர்களின் வழிமுறைகள்

(உ+ம்) போட்டி அதிகமாக உள்ளதா? இல்லையா? போட்டியாளர்களின் விநியோக வழிமுறைகள்

(உதாரணத்துடன் $2 \times 1 = 2$ புள்ளிகள்)
(உதாரணம் இன்றி $2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

agaram.lk

(iv) (அ) 1. தேவையான நிதியின் அளவு
2. நிதிதேவைப்படுகின்ற காலம் (நீண்ட காலமா, குறுங்காலமா என்பது)
3. கிரயம் (நிதியினை பெற்றுக் கொள்வதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும்
4. வணிக ஒழுங்கமைப்பின் தன்மை
5. முன்வைக்கவேண்டிய பிணைப் பாதுகாப்புத் தொடர்பான நிலைமைகள்
6. வணிகத்தின் மூலதன அமைப்பில் ஏற்படக்கூடிய தாக்கம்
7. நிதியினைப் பயன்படுத்தும் செயற்றிட்டத்தின் தன்மையும், அதன் மூலம் எதிர்பார்க்கும் அனுகூலங்களும்
8. முகாமைத்துவத்திற்கு ஏற்படும் தாக்கம். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. வணிகங்களுக்கிடையிலான அழைப்புக் கடன் சந்தை
2. உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை
3. அரச பிணைப்பத்திரச் சந்தை
4. கூட்டிணைக்கப்பட்ட கடன்பிணைப்புப் பத்திரச் சந்தை
5. பங்குச் சந்தை ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(v) அகநிதி
1. நிறுத்தி வைத்த இலாபம்
2. தேய்வு ஏற்பாடு
3. மேலதிக சொத்து விற்பனை
4. தொழிற்படு மூலதனக் கட்டுப்பாடு ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

Scanned with CamScanner

புறநிதி

1. பங்கு வழங்கல்
2. தொகுதிக்கடன் வழங்கல்
3. வங்கிக் கடன் வழங்கல்
4. குத்தகை வசதிகள்
5. வங்கி மேலதிகப் பற்று
6. வியாபாரக் கடன் பெறல்
7. வணிகப் பத்திரம்
8. ஈடுவைத்தல்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

08) (i) (அ) 1. முதலீட்டு வருவாய் வீதம் (பங்கு இலாபம், மூலதன இலாபம்)
2. நிறுவனத்தின் நிதி நிலைமை முகாமை முறை
3. பங்குகளின் விலை மாற்றம் (பங்கு விலை சுட்டி)
4. குறிப்பிட்ட துறையின் நிறுவனத்தின் நிலைப்பாடு (உ+ம்) நிதித்துறை
5. வட்டிவீதம், பணவீக்கம் அரசவரி கொள்கை போன்ற பொருளாதார காரணிகள்
6. அரசின் நிலைப்பாடு

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. பொருளாதாரச் செயற்பாடு தொடர்பாக ஏதேனும் விளக்கமொன்றைப் பெறக்கூடியதாக இருத்தல்.
2. பொருளாதாரத்தில் கம்பனிகளின் செயற்பாடு தொடர்பாக ஏதேனும் விளக்கம் ஒன்றினைப் பெறக்கூடியதாய் இருத்தல்.
3. ஏனைய நாடுகளிலுள்ள பங்குச் சந்தைகளின் நிலைமைகளோடு ஒப்பிடக்கூடியதாக இருத்தல்.
4. முதலீட்டுத் தீர்மானங்களை பயன்படுத்த முடிதல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ii) (அ) 1. வாடிக்கையாளரைப் பதிவு செய்தலும் அவர்களுக்கான கணக்கினை ஆரம்பித்தலும்
2. பங்குகளை வைப்புச் செய்வதற்கான கருமங்கள்.
3. பங்குகளை மீளப் பெறுவதற்கான கருமங்கள்.
4. பங்குகளின் பரிமாற்றம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்தல்.
5. உரிமை வழங்கல் தொடர்பான கருமங்கள்.
6. வாடிக்கையாளருக்கு மாதாந்த கணக்கு உற்று அனுப்புதல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

agaram.lk

(ஆ) 1. முதலீட்டாளர்கள் சார்பாக மத்திய வைப்பகமுறையில் கணக்குகளை ஆரம்பித்தல்.
2. முதலீட்டாளர்களின் கொள்வனவு விற்பனைக் கட்டளைகளைப் பொறுப்பேற்று அவற்றை நடைமுறைப்படுத்துதல்.
3. பங்குகளிலும், தொகுதிக் கடன்களிலும் முதலீடு செய்தல் தொடர்பான ஆலோசனைகளை முதலீட்டாளர்களுக்கு பெற்றுக் கொடுத்தல்.
4. பங்குச் சந்தையைப் பகுப்பாய்வு செய்தல், சந்தை ஆய்வு அறிக்கை தயாரித்தல் என்பவற்றின் மூலம் முதலீட்டாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை உச்சப்படுத்தவதனை உறுதிப்படுத்தல்.
5. கம்பனிகளைப் பட்டியல்படுத்துவதற்கு அனுசரணை வழங்கல்
6. வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனிகளது மூலதனத் திரட்டலுக்கு உதவுதல்

($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iii) 1. மூல / மைய நலன் உற்பத்திகள் :
உற்பத்திப் பொருளொன்றில் நுகர்வோர் எதிர்பார்க்கும் அடிப்படைப் பயன்.

2. அடிப்படை உற்பத்திகள் :
மைய உற்பத்திகளுக்கு மேலதிகமாக இனங்காணக்கூடிய பண்புகளை உள்ளடக்கிய உற்பத்திகள்.

Scanned with CamScanner

3. எதிர்பார்க்கும் உற்பத்திகள் :

வாடிக்கையாளரைக் கவரக்கூடியவாறு எதிர்பார்க்கும் முறையில் மேலதிகப் பாகங்களை இணைத்து உற்பத்தியினைச் சமர்ப்பித்தலாகும்.

4. விருத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் :

வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கின்ற மட்டங்களுக்கும் மேலாகப் பொருட்களை விருத்தி செய்து முன்வைத்தல் இம்மட்டத்தில் இடம்பெறும்.

5. சாத்தியமிக்க உற்பத்திகள் :

உற்பத்தியானது அனைத்து அபிவிருத்தி மட்டங்களையும் மாற்றங்களையும் உட்புகுத்தி எதிர்காலச் சந்தைக்குள் பிரவேசிக்கும் மட்டமாகும்.

(குறிப்பிட $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(விளக்கம் $4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(iv) (அ) 1. ஊழியர் வினைத்திறனை அபிவிருத்தி செய்தல்.
2. ஊழியர் கிரயத்தினைக் கட்டுப்படுத்தல்.
3. ஊழியர் அபிவிருத்தியினை ஏற்படுத்தல்.
4. ஊழியர் தொடர்பான சட்டரீதியான நிபந்தனைகளை நிறைவு செய்தல்.
5. ஊழியர் நலன்புரிச் சேவை
6. தொழிலுக்கு உரிய நேரத்திற்கு ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளல்.
7. ஊழியர் ஊக்குவிப்பை உருவாக்கல். ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

(ஆ) 1. பொருட்கள் சேவைகள் தொடர்பான கேள்வி
2. நிறுவனத்தின் எதிர்கால இலக்குகளும் திட்டங்களும்
3. நிறுவனத்தின் உற்பத்திமுறை
4. எதிர்காலத்தில் ஊழியர் ஓய்வு பெறல்
5. தானாக விலகும் ஊழியர்களின் எண்ணிக்கை
6. பதிவு உயர்வு பெறுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை
7. தற்போதைய எதிர்கால நிதிக்கூற்றுக்களின் நிலை ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)

agaram.lk

(v) (அ) 1. தொழில் அறிவித்தல்
2. திறன் அட்டவணை
3. அகத்தே உள்ள ஊழியர்களை அறிமுகப்படுத்தல்
4. பதிவாள் திட்டம் / மரபுரிமைத்திட்டம் ($4 \times \frac{1}{2} = 2$ புள்ளிகள்)
5. அக இணையம்

(ஆ) அனுகூலங்கள் :
1. ஊழியர் தூண்டப்படல்
2. சிறந்த ஊழியர் தொடர்பு ஏற்படுதல்
3. பொருத்தமான ஊழியர்களை வைத்துக் கொள்ள முடிதல்.
4. ஆட்சேர்த்தலுக்கும் ஆட்சேர்ப்பதற்குமான செலவுகள் குறைவடைதல்.
5. ஊழியர்களுக்கு நிறுவனத்திடம் காணப்படும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் அதிகரித்தல்.
6. ஊழியர்களை அறிமுகப்படுத்தவதற்கான தேவைப்பாடும் காலச் செலவும் குறைவடைதல்.

($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

பிரதிகூலங்கள் :
1. நவீன அறிவு நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படாதிருக்கும்.
2. பயிற்சிக்காக கூடிய செலவுகளை ஏற்க வேண்டி இருக்கும்.
3. ஊழியர்களுக்கிடையே தேவையற்ற போட்டி உருவாதல்
4. மிகப் பொருத்தமான ஊழியரை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு குறைவு.

($2 \times \frac{1}{2} = 1$ புள்ளிகள்)

Scanned with CamScanner